செ.வெ.எண்: 1 நாள்:1.8.2021

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1.8.2021 முதல் 7.8.2021 வரை கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரம் நிகழ்வையொட்டி, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் மற்றும் சுங்கசாவடி பகுதியில் கொரோனா நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பேருந்து பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் இன்று (1.8.2021) வழங்கினார்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மூன்றாம் ஆலை பரவல் வராமல் தடுக்க, தமிழக அரசு பல்வேறு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மாநிலம் முழுவதும் மேற்கொண்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்று எண்ணிக்கை மீண்டும் உயராவண்ணம் பல்வேறு விழிப்புணர்வு நிகிழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,1.8.2021 முதல் 7.8.2021 வரை கொரோனா தடுப்பு குறித்து விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. பொது சுகாதராம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மருத்துவர்கள், சுகாதாரத்துறை மருத்துவர்கள், செவிலியர்கள், நகராட்சி, பேருராட்சி, வட்டார அளவிலான சுகாதார அலுவலர்கள் மாவட்டம் முழுவதும் கொரோனா தடுப்பூசி செலுத்துவது குறித்தும், கொரோனாவிலிருந்து நம்மையும், நமது குடும்பத்தையும், தேசத்தை காத்துக்கொள்ள தடுப்பூசி கட்டாயம் போட்டுக்கொள்ள வலியுறுத்தியும், கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் குறித்தும், பரவும் விதம் குறித்தும், முன்னெச்சரிக்கை வழிமுறைகள், நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கும் பணிகள் இன்று புதிய பேருந்து நிலையம், சுங்கசாவடி ஆகிய பகுதிகளில் துவக்கி வைக்கப்பட்டது.

1.8.2021 முதல் 7.8.2021 கொரோனா தடுப்பு குறித்து விழிப்புணர்வு வார நிகழ்ச்சி தொடர்ந்து ஒரு வார காலம் மாவட்ட முழுவதும் நடைபெறுகிறது.பொதுமக்கள் தமிழக அரசு அறிவுறுத்தியுள்ள கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கடைபிடித்து மூன்றாம் அலையிலிருந்து நம்மையும், நமது குடும்பத்தை பாதுகாத்துக்கொள்ள கொரோனா தடுப்பூசி கட்டாயம் போட்டுக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பரமசிவன், துணை இயக்குநர் மரு.கோவிந்தன், நகராட்சி ஆணையாளர் திரு.ஆர்.முருகேசன், வட்டார மருத்துவர் அலுவலர் மரு.சுசித்ரா, மருத்துவர்கள் மரு.ராஜா, மரு.நவீன், மரு.விக்ரம், வட்டாட்சியர் திரு.பூவிதன், நகர நல சுகாதார அலுவலர் திரு.மோகனசுந்தரம், சுகாதாரத்துறை மற்றும் நகராட்சி அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி**